**ஊடக அறிக்கை**

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை

+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257

communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව

இலங்கை மத்திய வங்கி

CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2023.07.17 |

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2023 யூன்

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2023 யூனில் பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலொன்றையும் தயாரித்தல் நடவடிக்கைகளில் சுருக்கமொன்றையும் எடுத்துக்காட்டின.**


**தயாரிப்பு கொ.மு.சு 47.3**

**2023 யூன்**

தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2023 யூனில் 47.3 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, தயாரித்தல் நடவடிக்கைகளில் பின்னடைவை எடுத்துக்காட்டியது. அனைத்துத் துணைச் சுட்டெண்களிலும் அவதானிக்கப்பட்ட குறைவடைந்த செயலாற்றம் இப்பின்னடைவிற்கு பங்களித்தது.

உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகளில் வீழ்ச்சியானது பிரதானமாக புடவை மற்றும் அணியும் ஆடைத் துறைத் தயாரிப்பினால் தூண்டப்பட்டிருந்தது. பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிடுவதற்கமைய, இவ்வீழ்ச்சிக்கு தொடர்ச்சியாகக் குறைவடைந்த உலகக் கேள்வி பிரதான காரணமாக அமைந்தது. எனினும், சந்தைக் கேள்வியினை அதிகரிப்பதற்கு சில தயாரிப்பாளர்கள் மூலம் விலைகள் குறைக்கப்பட்டதன் மூலம் உணவு மற்றும் குடிபானத் துறைத் தயாரித்தலின் புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் சில மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டன. புதிய கட்டளைகளில் மற்றும் உற்பத்தியில் வீழ்ச்சிக்கு இசைவாக தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பனவும் குறைவடைந்தன. அத்தியாவசிய அலுவலர்களை மாத்திரம் மாற்றீடு செய்வதற்கும் குறைந்தபட்ச மூலப்பொருள் கையிருப்பினைப் பேணுவதற்கும் தாம் முயன்றதாக பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் மாத காலப்பகுதியில் குறைந்தளவு கட்டளைகளுடன் 2023 யூனில் குறுக்கமடைந்தது.

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

| மாறி | மே | யூன் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **46.2** | **47.3** | **+** | **வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 48.0 | 49.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 48.0 | 49.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 41.5 | 42.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 43.5 | 43.4 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 48.0 | 48.5 | + | குறுக்கமடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பொருளாதார நிலைமைகளில் படிப்படியான மீட்சியினை எதிர்பார்த்து அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேம்பாட்டினை எடுத்துக்காட்டின.

## *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் மேயிலிருந்து 0.8 புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் 2023 யூனில் 48.8 கொண்ட பெறுமதியினைப் பதிவுசெய்தது.

சீனா, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு. 2023 யூனில் மெதுவான வேகத்தில் மேம்பட்டது. எனினும் யூரோ வலயம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் தயாரிப்பு முகாமையாளர் சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 யூனில சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 யூலை 14 அன்று உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் உலக முழுவதும் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கொ.மு. சுட்டெண்களைத் தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2023 யூனில் மேலும் அதிகரித்து, 2022 சனவரி தொடக்கம் அதிகூடிய வாசிப்பான 56.7 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் இதற்கு முன்னிலை வகித்திருந்தன. எவ்வாறிருப்பினும், நிலுவையிலுள்ள பணிகள் மாதகாலப்பகுதியில் தொடர்ந்தும் குறைவடைந்த அதேவேளை தொழில்நிலை மாற்றமடையாதிருந்தது.

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, நிதியியல் பணிகள், ஏனைய தனிப்பட்ட பணிகள், காப்புறுதி மற்றும் தொழில்சார் பணிகள் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் 2023 மேயுடன் ஒப்பிடுகையில் 2023 யூனில் அதிகரித்தன.

அநேகமான துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் தொழில் நடவடிக்கைகள், 2023 யூனில் தொடர்ந்தும் வளர்ச்சியொன்றை அனுபவித்தன. அதற்கமைய, சந்தை வட்டி வீதங்களில் படிப்படியான வீழ்ச்சியினால் தூண்டப்பட்டு நிதியியல் பணிகள் துணைத் துறை மேம்பாடுகளைக் காண்பித்தன. இதற்கு மேலதிகமாக, ஏனைய தனிப்பட்ட பணிகள், கல்வி மற்றும் தொழில்சார் பணிகள் துணைத் துறைகளும் மாதகாலப்பகுதியில் சாதகமான அபிவிருத்திகளைக் காண்பித்தன. ஹஜ் பண்டிகை பருவகாலம் காரணமாக ஆடைகள், காலணிகள் வியாபாரங்களில் சில மேம்பாடுகள் காணப்பட்ட போதும், மொத்தவிற்பனை மற்றும் சில்லறை வர்த்தக துணைத் துறை தொழில் நடவடிக்கைகளில் தொடர்ச்சியான வீழ்ச்சியினை அனுபவித்தது.

மாதகாலப்பகுதியில் நிலுவையிலுள்ள பணிகள் உயர்வான வீதத்தில் குறைவடைந்த வேளையில் தொழில் நிலையானது மேயில் அறிக்கையிடப்பட்ட மட்டத்திலிருந்து மாற்றமின்றி காணப்பட்டது.


| மாறி | மே | யூன் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **53.5** | **56.7** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | கொ.மு.சு துணைச் சுட்டெண்கள் | | | |
| புதிய வியாபாரங்கள் | 59.3 | 59.4 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 57.4 | 61.9 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 36.6 | 50.0 | + | நடுநிலைக்கு வீழ்ச்சியடைகின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 42.2 | 41.4 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 72.1 | 70.8 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொள்கை வீதக் குறைப்புக்கள் மற்றும் இலங்கை ரூபா வலுவடைதல், இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல் மற்றும் பணவீக்க அழுத்தங்கள் மிதமடைதல் என்பன மூலம் தூண்டப்பட்டு பொருளாதார நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடுகளுக்கு மத்தியில் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் யூனில் தொடர்ந்தும் மேம்பட்டன.

**பணிகள்**
**கொ.மு.சு 56.7**
**2023 யூன்**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

*உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2023 மேயின் 55.5 இலிருந்து 2023 யூனில் 54.0 ஐப் பதிவுசெய்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினைச் சமிக்ஞைப்படுத்தியது.

சீனா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 யூனில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டின.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 யூலை 14 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**
மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.
**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.